20

# ஸீரதுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் - II



## மதீனாவில் ஒரு முன்மாதிரி சமூகம்

ஒரு சிறந்த சகோதரத்துவப் பிணைப்பின் ஊடாகத் தனித்துவமான தொரு சமூகத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உருவாக்கினார்கள். ஏற்கனவே மதீனாவில் பல வருடங்கள் தமக்கிடையே போரிட்டுக்கொண்டிருந்த அவ்ஸ், கஸ்றஜ் கோத்திரத்தினர் இடையே சமாதானம் செய்துவைக்கப்பட்டது. அங்கு ஜமாஅத் தொழுகை, ஜும்ஆத் தொழுகை, நோன்பு, ஸக்காத் உள்ளிட்ட பல்வேறு கடமைகள் விதியாக்கப்பட்டன. சமூக வாழ்க்கைக்கு அவசியமான சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. குற்றங்களுக்கான தண்டனைகளும் விதியாக்கப்பட்டன. இந்த அரசில் நீதி, நேர்மை, சமத்துவம், புரிந்துணர்வு, பரஸ்பர உதவி, ஒழுக்கம் போன்ற இன்னோரன்ன உயரிய பெறுமானங்கள் தழைத்தோங்கின.

## யூதர்களுடன் உடன்படிக்கை

மதீனாவில் முஸ்லிம்கள் மாத்திரமன்றி இன்னும் சில பிரிவினரும் வாழ்ந்தனர். அவர்களுள் அதிக எண்ணிக்கையினராக இருந்த யூதர்களுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். இவ்வுடன்படிக்கை 'ஸஹீபதுல் மதீனா' என அழைக்கப்பட்டது. இதன் மூலம் பிற சமயத்தவர்கள் தமக்குரிய வழிபாட்டு உரிமையை பெற்றுக் கொண்டனர். மதீனா அரசை எல்லோரும் சேர்ந்து பாதுகாக்க வேண்டும் என இதில் வலியுறுத்தப்பட்டது. இவ்வொப்பந்தம் மூலம் மதீனாவில் அமைதியான ஒரு சூழல் உருவாக்கப்பட்டதுடன், மக்கத்துக் காபிர்கள் திடீரென்று வந்து தாக்க முடியாத நிலையும் ஏற்பட்டது.

## கஸவாத்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பல யுத்தங்களை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நேரடியாகக் கலந்துகொண்டார்கள். அவ்வாறு அவர்கள் கலந்துகொண்ட யுத்தங்களே **'கஸவாத்'** எனப்படுகின்றன. இப்போர்களில் எல்லாம் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு உதவி செய்து தனது உயரிய மார்க்கமான இஸ்லாத்தைப் பாதுகாத்தான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பத்ர், உஹத், அஹ்ஸாப், கைபர், ஹுனைன் போன்ற போர்களை எதிர்கொண்டார்கள். இதன் போது இஸ்லாம் வலியுறுத்தியுள்ள யுத்த தர்மங்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு தன் தோழர்களை ஏவியுள்ளார்கள். இப்போர் தருமங்கள் இன்றுவரை எல்லோருக்கும் சிறந்த படிப்பினையாக உள்ளன.

- அத்துமீறி அநியாயம் இழைத்தோருடன் மாத்திரமே யுத்தம் புரிய அனுமதி உண்டு. பொதுமக்களை ஒருபோதும் தாக்கக் கூடாது.
- போரின்போது பெண்களையோ, குழந்தைகளையோ, முதியவர்களையோ தாக்க அனுமதி கிடையாது.
- பசுந் தாவரங்கள், கனி தரும் மரங்கள், பயிர் நிலங்களை நாசம் செய்யக் கூடாது.
- எதிரியைச் சித்திரவதை செய்யவோ, உருக்குலைக்கவோ, எரிக்கவோ கூடாது.

- வழிபாட்டுத் தளங்களையோ, மத போதகர்களையோ இலக்கு வைக்கக் கூடாது.

இவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதித்த யுத்த தர்மங்கள் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமானதாக அமைந்துள்ளன.

குறுகிய காலத்தில் ஒரு சிறந்த சமூகத்தை அல்லாஹ்வின் உதவியோடு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டியெழுப்பியமை ஒரு வரலாற்றுச் சாதனை ஆகும். இதனால் தான் மைக்கல் எச். ஹார்ட் என்பவர் தனது `The Hundred' என்ற நூலில், உலகில் செல்வாக்குச் செலுத்தியவர்களில் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே முதலிடம் வகிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாம், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களிலும் உள்ள முன்மாதிரிகளைக் கற்று, அவற்றை எம் வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போதுதான் ஈருலகிலும் எம்மால் நிச்சயம் வெற்றிபெற முடியும்.

**பயிற்சி**

பின்வருவனவற்றிக்கு விடை தருக.

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவில் யூதர்களுடன் மேற்கொண்ட உடன்படிக்கை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கலந்து கொண்ட போர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? அவ்வாறான போர்கள் மூன்றைக் குறிப்பிடுக.
3. இஸ்லாம் கூறும் யுத்த தருமங்கள் நான்கைக் குறிப்பிடுக.
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மதீனா வாழ்விலிருந்து நீர் பெற்றுக்கொண்ட படிப்பினைகள் ஐந்தை எழுதுக.
5. மதீனா சமூகத்தின் சிறப்புப் பண்புகள் ஐந்தினை எழுதுக.